### மெட்ரோ ரெயில் விரிவாக்கப் பாதை:

# வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் இடையே 2 வாரத்தில் சோதனை ஓட்டம்

சென்னை, டிச.1–

வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே விரிவாக் கப்பாதையில் அடுத்த 2 வாரத்தில் சோதனை ஓட்டம் நடத்த திட்டமி டப்பட்டுள்ளது என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகா ரிகள் தெரிவித்தனர்.

## கொரோனா பரவலால் தொய்வு

சென்னையில் போக்குவ ரத்து நெரிசல் அதிகம் உள்ள வண்ணாரப்பேட்டை– திரு வொற்றியூர் விம்கோ நகர் வரை 9.051 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.3 ஆயிரத்து 770 கோடி மதிப்பில் மெட்ரோ ரெயில் சேவைக்கான விரி வாக்கப்பணிகள் நடந்து வரு கிறது. இதனை கடந்த 2016–ம் ஆண்டு மறைந்த முதல்– அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார். இதில், சுரங்கப்பாதையில் தியாகரா ஜர் கல்லூரி, தண்டையார் பேட்டை ஆகிய இரண்டு ரெயில் நிலையங்களும், உயர்த் தப்பட்ட பாதையில் புதுவண் ணாரப்பேட்டை, சுங்கச்சா வடி, காலடிப்பேட்டை, திரு வொற்றியூர் தேரடி, திருவொற் றியூர், விம்கோநகர் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்க ளும் வர உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் பணி களை முடித்து சோதனை ஓட் டம் நடத்தப்பட்டு ஜூன் மாதம் ரெயில் சேவையை தொடங்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் கொரோனா தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு பிறப் பிக்கப்பட்டதால் பணிகளில் தொய்வு ஏற்பட்டது.

## ஜனவரியில் பணிகள் நிறைவு

தற்போது பொதுமுடக்கம் தளர்வுகளுக்கு பிறகு பணிகள் தீவிரமாக நடந்தது. தற்போது பணிகள் அனைத்தும் நிறைவ டையும் நிலையை எட்டி உள் ளது. தொடர்ந்து வருகிற ஜன வரி மாதம் புத்தாண்டில் பணி களை முடித்து பாதுகாப்பு கமிஷனர் ஆய்வுக்கு பிறகு சேவையை தொடங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

விரிவாக்கப்பாதையில் ரெயில் பாதை அமைக்கும் பணி முற்றிலுமாக நிறைவ டைந்துவிட்டதால் இந்தப்பா தையில் சோதனை ஓட்டம் நடத்த முடியும். இம்மாதம் 2–வது வாரத்தில் டீசல் ரெயில் என்ஜினை இயக்கி சோதனை ஓட்டம் நடத்த திட்டமிட்டு உள்ளோம். தொடர்ந்து ரெயிலையும் இப் பாதையில் இயக்கி பார்க்கப் பட உள்ளது. ரெயில் நிலை யங்களின் கட்டுமானம், தொலைத் தொடர்பு மற்றும் சிக்னலிங் அமைப்புகளை நிறு வும் பணி தற்போது நடந்து வருகிறது. ரெயில் மற்றும் நிலையத்துக்கு தேவையான மின்சாரம் 25 கிலோ வாட் என்ற அளவில் கட்டமைப்பு களை நிறுவப்பட உள்ளது. ஜனவரி 2–வது வாரத்தில் இந் தப்பணிகளை முடிக்க இருக்கி றோம்.

சுரங்க ரெயில் நிலையத்தில் ரெயில் தண்டவாளத்திற்கும், பிளாட்பாரத்திற்கும் இடையே அமைக்கப்படும் திரை கதவு கள் அமைக்கும் பணி தீவிர மாக நடந்து வருகிறது. இந்தப் பணி ஒரு மாதத்தில் முடிக்கப் படலாம். கொரோனா தொற்று பரவல் காரணமாக சோதனை மற்றும் சேவை தொடக்கம் தள்ளி போனது. ஜனவரி இறுதிக்குள் பணி களை முடிக்க திட்டமிட்டு உள்ளோம்.

## பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

வண்ணாரப்பேட்டை–திரு வொற்றியூர் விம்கோ நகர் விரி வாக்க பாதை ரெயில் இயக்கத் துக்கு ஏற்றது என்று சான்றி தழை ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் வழங்கிய பின்னர், முறையாக புத்தாண்டான ஜனவரி இறுதி அல்லது பிப்ர வரி தொடக்கத்தில் போக்குவ ரத்தை தொடங்க திட்டமிடப் பட்டுள்ளது. இந்தப்பாதை யில் இயக்குவதற்காக ரூ.200 கோடியில் 10 மெட்ரோ ரெயில்கள் வாங்கப்பட்டு சோதனை செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறி னார்கள்.